## மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

# (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல்!

**தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!**

**தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/ MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல், வழக்கறிஞர் அ. சரவணன் (தணிக்கைக் குழு உறுப்பினர், தி.மு.க.) அவர்கள் தலைமை தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டு, பணிமனை வாரியாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு பணிமனைத் தேர்தல் நடைபெறும். அதனையடுத்து மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் கீழ்கண்டவாறு நடைபெறும்.**

**தேர்தல் கால அட்டவணை பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்- 03.03.2025 காலை 10.00மணி (பணிமனைகள் தோறும்)
வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் - 06.03.2025 காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 10.03.2025 காலை 10.00 மணி (பணிமனைகள் தோறும்)
வேட்புமனு படிவம் வழங்குதல் - 15.03.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
வேட்புமனு தாக்கல் - 17.03.2025 காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை
வேட்புமனு பரிசீலனை - 18.03.2025 காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 19.03.2025 காலை 10.00 மணி
வேட்புமனு திரும்பப் பெறுதல் - 19.03.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 20.03.2025 காலை 11.00 மணி
வாக்குப் பதிவு - 22.03.2025 காலை 6.00 மணி முதல்மாலை 6.00 மணி வரை

பணிமனை நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் ஆகியவை அந்தந்த பணிமனைகளில் வாக்குகள் எண்ணப்பட்டு உடனே முடிவுகள் அறிவிக்கப்படும் ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 23.03.2025 காலை 10.00 மணி (பணிமனை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள்)
வேட்புமனு படிவம் வழங்குதல் - 24.03.2025 காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை
வேட்புமனு தாக்கல் - 24.03.2025 காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
வேட்புமனு பரிசீலனை - 25.03.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 25.03.2025 மாலை 3.00 மணி
வேட்புமனு திரும்பப் பெறுதல் - 26.03.2025 காலை 10.00 மணி முதல் பகல் 11.00 மணி வரை
இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 26.03.2025 மாலை 3.00 மணி
வாக்குப் பதிவு - 27.03.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

மத்திய சங்கத் தேர்தல் வாக்காளர் பட்டியல் வெளிடுதல், வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவை தி.மு.க. தலைமை அலுவலகமான, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும்.
ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**குறிப்பு :** மண்டலந்தோறும் தலைமைக் கழக மேலிட பார்வையாளர்கள் மற்றும் பணிமனை வாரியாக தேர்தல் ஆணையாளர்கள் தலைமைக் கழகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

சென்னை-18 **(மு. சண்முகம்)**
நாள்- 26.02.2025 பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவை

---

### பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# அறந்தாங்கியில் கண்டன ஆர்ப்பாட்டம்!

*புதுக்கோட்டை, பிப். 28 -*

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப் போருக்கு நிர்ப்பந்திக்கும் பா.ஜ.க அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி தபால் நிலையம் எதிரே நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை தி.மு.க. தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் தலைமை வகித்தார்.

அறந்தாங்கி தி.மு.க. நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.க. சட்ட திருத்தக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. மாணவர் அணி கூட்டமைப்பின் மாநில செயலாளர் பூமிநாதன் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பொன். கணேசன், சக்தி ராமசாமி, கே.பி.கே.டி. தங்கமணி, அழகு சிதம்பரம், அ.முத்து, அரு.வடிவேலு,

பேரூர் கழக செயலாளர் கே.சி.சிவக்குமார், கணேசன், பழனிக்குமார்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நசுருதீன், இரா. தமிழ் ராசா, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செந்தில் வேலன், பழனி குமார், சுற்றுச்சூழல் அணி குமரேசன்,

சக்திவேல், பழனி தேவா, மாவட்ட அயலக அணி அப்துல் நாசர், அரசர்குளம் பாத்திமா ஆகியோரும் திமுகவின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராஜ பெரியண்ணன் நன்றி தெரிவித்தார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-02-2025



---



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம்.பாண்டி ஏற்பாட்டில் பெரியகுளம் தனியார் மண்டபத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. உடன் சரவணக்குமார் எம்.எல்.ஏ., பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்ல பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், திருக்கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜா ரமேஷ், முருகேசன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---


## மூன்றாம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்
நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்


**— நினைவு நாள் : 28.02.2025 —**

**தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022**

நீங்கள் காட்டிய கலைஞரின் பாதையில்
கழகத்தலைவரின் வழியில்
சின்னவர் அவர்தம் கரங்களுக்கு வலுசேர்க்க
தொடர்ந்து பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**
ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,





# நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க